• 4 பக்கங்கள் • விலை ரூ. 5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 28.06.2026 • மலர் 04 • இதழ்: 179 • ஞாயிற்றுக்கிழமை • Edition : Nagercoil • 28.06.2026 • Vol : 04 • Issue : 179 • Page : 4 • Rs. 5/-

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!

செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

புதுச்சேரியில்

# புதுப்பிக்கப்பட்ட கலங்கரை விளக்கம்

## மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் திறந்து வைத்தார்



புதுச்சேரி, ஜூன் 28

புதுச்சேரியில் புதுப்பிக்கப்பட்ட, புகழ்பெற்ற பழைய கலங்கரை விளக்கத்தை திறந்து வைத்து மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பேசியதாவது :

புதுச்சேரி என்பது தமிழ், பிரெஞ்சு, இந்தியர், கடல்சார்ந்த மற்றும் உலகளாவிய தாக்கங்களின் சங்கமமாகும் என்று அவர் கூறினார். பழைய கலங்கரை விளக்கத்தை மீட்டெடுப்பதற்கான மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் முடிவு, நிறுவன பெருமிதத்தையும் பொது பாரம்பரியத்தின் மீதான பொறுப்புணர்வை காட்டுவதோடு, கலாச்சாரம் மற்றும் நினைவுகளின் பாதுகாவலர்களாக அரசு துறைகள் இருக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது என்று அவர் தெரிவித்தார்.

பழைய கலங்கரை விளக்கம் 1836 முதல் நிலைத்து நிற்கிறது என்பதை சுட்டிக்காட்டிய நிதி மந்திரி, புதுப்பிக்கப்பட்ட இந்த பழைய கலங்கரை விளக்கத்தின் மூலம், புதுச்சேரியின் கடல்சார் வரலாறு, பழக்கவழக்கங்களின் பாரம்பரியம், வருங்கால சந்ததியினருக்காக பாரம்பரியத்தை பாதுகாப்பதில் இந்தியாவின் பரந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய ஓர் அடையாள சின்னத்தை நாம் புதுப்பிக்கிறோம் என்று பொருள் என தெரிவித்தார்.

ஒரு காலத்தில் கடலின் நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் கப்பல்களுக்கு கலங்கரை விளக்கம் வழிகாட்டியது போல், இன்று நவீன பொருளாதாரத்தின் சிக்கல்களுக்கு மத்தியில் பொருளாதார நிறுவனங்கள் வர்த்தகத்திற்கு வழி காட்டுகின்றன என்று அவர் கூறினார். அவை நிலையானதாகவும், நேர்மையாகவும், சேவை மனப்பான்மையுடனும் இருக்க வேண்டும். அரசு நிறுவனங்கள் கொண்டிருக்க வேண்டிய கடமை, விழிப்புணர்வு, சேவை, நிலைத்தன்மை ஆகிய விழுமியங்களை புனரமைக்கப்பட்ட இந்த கலங்கரை விளக்கம் நினைவூட்டுகிறது என்று மந்திரி தெரிவித்தார்.

கலங்கரை விளக்கத்தின் பெருமையை மீட்பதில் மேற்கொண்ட முயற்சிகளுக்காக மத்திய பொதுப்பணி துறையையும் இந்திய தேசிய கலை மற்றும் கலாச்சார பாரம்பரிய அறக்கட்டளையையும் பாராட்டிய நிதி மந்திரி, இந்த வெற்றிகரமான புனரமைப்பு, இந்தியா முழுவதும் மேற்கொள்ளப்படும் இது பேபான்ற முயற்சிகளுக்கு ஒரு முன் மாதிரியாக அமையும் என்றார். இந்த நிகழ்ச்சியில் புதுச்சேரி யூனியன் பிரதேசத் துணைநிலை கவர்னர் கைலாசநாதன், முதல்மந்திரி என். ரங்கசாமி, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் செல்வகணபதி மற்றும் மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## உங்களுக்காக போராடிக்கொண்டே இருப்பேன்: ராகுல் பதிவு



புதுடெல்லி, ஜூன் 28

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி மக்களவை எதிர்க்கட்சி தலைவராக பொறுப்பேற்று நேற்று 2 ஆண்டுகள் நிறைவடைந்தன. இதையொட்டி, அவர் தனது 'எக்ஸ்' பக்கத்தில் ஒரு வீடியோவுடன் பதிவு வெளியிட்டு இருந்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் 2 ஆண்டு களில் ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு இந்தியனின் குரலையும் அதிகார வர்க்கத்தின் காதுகளுக்கு எடுத்துச் செல்லும் ஒரே பணிக்கே அர்ப்பணித்துள்ளேன். நீட் தேர்வர்களுக்காக போராடுதல், தேர்தல் மோசடியை அம்பலப்படுத்துதல், அரசியலமைப்பை பாதுகாத்தல் என ஒவ்வொரு முனையிலும் உங்களுடன் நின்றிருக்கிறேன். இன்றும் நிற்கிறேன்.

எப்போதும் நிற்பேன். தெருக்களில் இருந்து நாடாளுமன்றம் வரை மக்களின் நம்பிக்கைதான் எனது மாபெரும் பலம். இந்த பயணம் நீளமானது. ஆனால், எனது உறுதிப்பாடு அதே தான். உங்களுக்காக போராடிக் கொண்டே இருப்பேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி நியமன விவகாரம்: அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம்

சென்னை, ஜூன் 28

*LongDistance Bus & Rail*

நம்பிக்கையானவருக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ள அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழ்நாட்டின் டெல்லி சிறப்புப் பிரதிநிதியாக ஜனநாயகன் திரைப்படத்தின் தயாரிப்பாளர் வெங்கட நாராயணாவை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. இதற்கு பல்வேறு கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக அமைச்சர் நிர்மல் குமார் பேசி இருப்பதாவது;

இது ஒன்றும் பெரிய விஷயம் கிடையாது. வெங்கட நாராயணா கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர் அல்ல. கர்நாடக தலைநகர் பெங்களூரில் இருந்து தொழில் செய்து வருகிறார். அவர் ஆந்திராவை சேர்ந்தவர். டெல்லிக்கான பிரதிநிதியாக இருக்கப் போகிறார். பெரிய முடிவுகளை எடுக்கப்போவதில்லை. முக்கியமான விசயம் என்னவென்றால், கடினமான நேரத்தில் மிகவும் உறுதியாக நின்றவர். மிகவும் நம்பிக்கையானவர். தவறான நபருக்கு அந்த பொறுப்பு வழங்கப்படவில்லை. கடந்த காலத்தில் பல அழுத்தங்கள் அவருக்கு வந்தன.

முதல்அமைச்சர் விஜய் மற்றும் எங்கள் மீது பல குற்றச்சாட்டுகளை கூற அழுத்தங்கள் கொடுக்கப்பட்டது. அதையெல்லாம் தாண்டி உறுதியாக நிற்பவர். அவர் பெரிய முடிவுகளை எடுக்கப்போவதில்லை. ஒப்புதல் கொடுக்கப்போவதில்லை. மத்திய மற்றும் தமிழ்நாட்டுக்கு ஒருங்கிணைப்பாளராக இருக்கப் போகிறார். டெல்லியில் பிறந்தவர்கள், அங்கே இருந்தவர்களையெல்லாம் போட்டிருக்கிறார்கள்.

இந்த பொறுப்பு முதலில் அலங்காரமாக இருந்தது. எம்.எல்.ஏ., மக்களவை தேர்தலில் தோற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டது. தற்போது நம்பிக்கையானவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு பணம் பெரிய விசயம் கிடையாது. இந்த பொறுப்புதான் பெரிய விசயம் கிடையாது. நம்பிக்கையானவர்.

## தொலைந்துபோன பத்திரங்களுக்கு முறைகேடாக சிஎஸ்ஆர் கொடுத்த கடலூர் இன்ஸ்பெக்டர் டிஸ்மிஸ்: விழுப்புரம் டிஐஜி அதிரடி



விழுப்புரம், ஜூன் 28

தொலைந்துபோன பத்திரங்களுக்கு முறைகேடாக சிஎஸ்ஆர் போட்டுக் கொடுத்த கடலூர் மாவட்டம் ஒரத்தூர் பெண் இன்ஸ்பெக்டரை பணியில் இருந்து டிஸ்மிஸ் செய்து டிஐஜி அருளரசு உத்தரவு பிறப்பித்துள்ளார். கடலூர் மாவட்டம் ஒரத்தூர் காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றுபவர் லட்சுமி. இவர் கடந்த 202425ம் ஆண்டுகளில்

கடலூர் மாவட்டம் புவனகிரி காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றியபோது கடலூர் மாவட்டம் மட்டுமின்றி வெளி மாவட்டங்களில் தொலைந்துபோன பத்திரங்களுக்கு கடலூர் மாவட்டத்தில் தொலைந்ததாக பல லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்று போலியான சிஎஸ்ஆர் போட்டதாக புகார் எழுந்தது.

சென்னை, திருப்பூர், கடலூர் போன்ற பகுதிகளில் இருந்து சிலர் இங்கு வந்து தங்களது நில பத்திரங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் தொலைந்து விட்டதாக கூறி புகார் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு சிஎஸ்ஆர் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று தொடர்ச்சியாக நடைபெற்று வந்த நிலையில் இந்த தகவல் அப்போதைய கடலூர் மாவட்ட போலீஸ் எஸ்பி ஜெயக்குமாருக்கு தெரியவரவே அவர் ரகசிய விசாரணை நடத்தினார். அப்போது இத்தகவல் உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து அவரை கடலூர் மாவட்ட ஆயுதப்படைக்கு மாற்றிய நிலையில் மீண்டும் விசாரணை தீவிரமானது. தொடர்ந்து அப்போதைய சிதம்பரம் டிஎஸ்பி பிரதீப் மற்றும் எஸ்பியால் நியமிக்கப்பட்ட ஒரு சில இன்ஸ்பெக்டர்கள் உள்ளிட்டோர் புவனகிரி காவல் நிலையம் வந்தும், வேறு பல வகையிலும் இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தினர். அப்போது இன்ஸ்பெக்டர் லட்சுமி வழங்கிய சிஎஸ்ஆர் ஆவணங்களை சோதனை செய்து, அதுகுறித்து விசாரித்தபோது அவர் மீதான குற்றச்சாட்டுகள் உண்மை என தெரியவந்தது.

தொடர்ந்து அப்போதைய கடலூர் மாவட்ட எஸ்.பி. ஜெயக்குமாருக்கு அறிக்கையாக அனுப்பினார். அதன் அடிப்படையில் அவர் விசாரணை நடத்தி விசாரணை அறிக்கையை டிஐஜிக்கு அனுப்பியுள்ளார். இதையடுத்து இன்ஸ்பெக்டர் லட்சுமியை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சஸ்பெண்ட் செய்து உத்தரவிடப்பட்டது. தொடர்ந்து அவர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தப்பட்ட நிலையில் டிஜிபி உத்தரவின் பேரில் அவரை பணியில் இருந்து நிரந்தரமாக டிஸ்மிஸ் செய்து நேற்றைய தினம் விழுப்புரம் சரக டிஐஜி அருளரசு உத்தரவிட்டார்.

கடலூர் மாவட்டத்தில் குற்றச்சாட்டுகளில் சிக்கி இன்ஸ்பெக்டர்கள் தொடர்ந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டு வருவதால் இன்ஸ்பெக்டர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு இன்ஸ்பெக்டராக பணியாற்றிய ஜெய்சங்கர் கடந்த பிப்ரவரி மாதம் 12ம் தேதி டிஸ்மிஸ் செய்யப்பட்டார்.

விழுப்புரம் மாவட்டத்தில் கஞ்சனூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டராக ஏற்கனவே பணியாற்றியபோது வழக்கு ஒன்றில் சரியாக புலன்விசாரணை மேற்கொள்ளாத குற்றச்சாட்டில் அவரை டிஸ்மிஸ் செய்து இதே விழுப்புரம் சரக டிஐஜி அருளரசு உத்தரவிட்டிருந்தார். தற்போது புவனகிரி காவல் நிலையத்தில் பணியாற்றி, ஒரத்தூர் காவல்நிலையத்தில் பணியாற்றும் பெண் இன்ஸ்பெக்டர் டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளதால் இன்ஸ்பெக்டர்கள் பீதியில் உள்ளனர்.

## திரைக்கதை மன்னன் என போற்றப்படும் இயக்குனர் கே .பாக்யராஜ் மறைவுக்கு திருப்பூரில் கவிப்பேரரசு வைரமுத்து இரங்கல்



திருப்பூர்ஜூன்:27

15 வேலம்பாளையத்தில் உள்ள தனியார்விடுதியில் கவிப்பேரரசு வைரமுத்து செய்தியாளர்களை சந்தித்தார்.

பாரதிராஜா மறைந்து 17 நாட்கள் ஆகிறது. அதற்குள் பாக்கியராஜ் மறைவு. பாரதிராஜா மண் ஈரம் காயவில்லை அதற்குள் பாக்கியராஜ் உடலுக்கு தீ முட்ட வேண்டிய நிலையில் உள்ளோம். பாக்கியராஜ் ஒரு பன்முக தன்மை கொண்டவர். நடிகன் மட்டும் இல்லை தனக்குள் பல அவதாரங்களை கொண்டுள்ளார். இவரை போல் கொங்கு மண்டலத்தில் இன்னொருவர் தொடர்வதற்கு எத்தனை காலம் ஆகும் என்று தெரியவில்லை. பாரதிராஜா, பாக்கியராஜ் இருவருக்குமான தொடர்பு அதிகம். பாரதிராஜாவின் வெற்றிக்கு பாக்கியராஜ் வசனம் மிக முக்கியமக இருந்தது. வசனத்தில் மிக எளிமையான நடைமுறையில் எழுதி உள்ளார். பாக்கியராஜுக்கு பல படங்களில் பாடல்எழுதி உள்ளேன். சுந்தரகாண்டம், துறால் நின்னு போச்சு , அவருக்கு பாடல் எழுதுவது மிக கடினம். அவர் ஒரு பல்லவி நினைத்து வத்திருப்பார். அது வரும் வரை நம்மை விட மாட்டார். அவர் வாழ்வில் பல மேடு பள்ளங்களை கடந்துள்ளார். இன்று அவர் புகழோடு உள்ளார். ஆனால் அதற்கு அவர் பட்ட கஷ்டங்கள் பல சென்னையில் ரிக்க்ஷா ஒட்டியவர் பாக்கியராஜ் என்பதை மக்கள் மறக்க கூடாது. பட்டிக்காட்டு இளைஞர்களாம் படம் இயக்க முடியும் என காட்டியவர் பாரதிராஜா, ஆனால் சாதாரண மக்களும் எழுத முடியும், நடிக்க முடியும் என்று காட்டியவர்பாக்கியராஜ். சுந்தரகாண்டம் படம் எடுக்க வேண்டும் என்பதற்காக சுந்தரகாண்டம் படிக்க கற்றுக்கொண்டார்.

பாரதிராஜா இறந்த பின்னர் நானும் பாக்கியராஜும் 40 நிமிடங்கள் பேசினோம். பாக்கியராஜுக்கு நான் நன்றி கடன் பட்டுள்ளேன் பாக்கிய பத்திரிகையில் அவருக்கு ஒரு தொடர் எழுதினேன். இந்த குளத்தில் கல் எறிந்தவர்கள் என்ற தொடர் தான் அது.

பூர்ணிமா பாக்கியராஜ் மற்றும் அவரது குடும்பத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கல். சென்னையில் இருந்து கிளம்பிய போது தான் எனக்கு இந்த தகவல் கிடைத்து.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக மாணிக்கம் தாகூர் நியமனம்



சென்னை, ஜூன் 28

தமிழ்நாடு மநில காங்கிரஸ் தலைவராக மாணிக்கம் தாகூர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். செல்வபெருந்தகை மாற்றப்பட்டு புதிய தலைவராக மாணிக்கம் தாகூர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சட்டமன்ற தேர்தல் முடிவுக்கு தமிழக அரசியல் களம் மாறியது. திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸ், தவெகவுடன் கூட்டணி அமைத்தது. அப்போது இருந்தே செல்வபெருந்தகை மாற்றம் செய்யப்படலாம் என்று பேச்சு அடிபட்டது.

செல்வபெருந்தகையும் தன்னை காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொறுப்பில் இருந்து மாற்றுமாறு கோரிக்கை விடுத்ததாக கூறியிருந்தர். இந்த நிலையில், மாணிக்கம் தாகூரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் புதிய தலைவராக நியமனம் செய்து அகில இந்திய காங்கிரஸ் அறிவித்துள்ளது. விருதுநகர் தொகுதி எம்பியாக உள்ள மாணிக்கம் தாகூர், தேர்தலுக்கு முன்பாகவே ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்று குரல் கொடுத்து வந்தார். அதிரடி பேச்சுகளால் அறியப்படும் மாணிக்கம் தாகூர், திமுகவை சமீப காலமாக கடுமையாக விமர்சித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களுக்கு சாதிய அடையாளங்களுடன் அடையாள அட்டை வழங்கும் முடிவை திரும்பப் பெற வேண்டும் டிடிவி தினகரன்



சென்னை, ஜூன் 28

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

அரசுப்பள்ளி மாணவர்களுக்கு அவரவர் சாதி சார்ந்த அடையாளங்களுடன் கூடிய அடையாள அட்டை வழங்க முதல்அமைச்சர் உத்தரவிட்டிருப்பதாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் அமைச்சர் ஊடகங்களுக்கு அளித்திருக்கும் பேட்டி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சாதி, மத, இன வேறுபாடுகளைக் களைந்து சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் மனிதநேயத்தை வளர்க்கும் இடமான பள்ளிகளில், மாணவர்களின் அடையாள அட்டையில் அவரவர் சாதி சார்ந்த விவரங்களைக் குறிப்பிட முனைவது பள்ளி வளாகங்களுக்குள்ளாகவே சாதிய அடையாளங்களை வலுப்படுத்தும் ஆபத்து மிக்க முயற்சியாகும்.

தமிழகத்தில் உள்ள அரசுப்பள்ளிகளில் மாணவர்கள் மத்தியில் ஏற்கனவே ஊடுருவியிருக்கும் சாதிய பாகுபாடை போக்க வேண்டிய அரசு, அவர்களின் மனதில் சாதிய அடையாளத்தை ஆழமாக விதைப்பது சமூக நீதிக்கும், அரசியலமைப்புச் சிந்தனைகளுக்கும் முற்றிலும் எதிரானது ஆகும்.

எனவே, அரசுப்பள்ளிகள் என்பது மாணவர்களை ஒன்றிணைக்கும் பாலமாக இருக்க வேண்டுமே தவிர, அவர்களை சாதியின் பெயரில் பிரிக்கும் கருவியாக இருக்கக் கூடாது என்பதை உணர்ந்து, மாணவர்களுக்கு சாதிய அடையாளங்களுடன்கூடிய அடையாள அட்டை வழங்கும் முடிவை உடனடியாக திரும்பப் பெற்றிட வேண்டும் என பள்ளிக்கல்வித்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 28 ஆம் தேதி 1.65 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து; கலெக்டர் ரேவதி தகவல்




தஞ்சாவூர் ஜூன் 27

தஞ்சாவூர் மாவட்டத்தில் 5 வயதுக் கு உட்பட்ட1.65 லட்சம் குழந்தைகளு க்கு வருகின்ற 28ஆம் தேதி போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது என கலெக்டர் ரேவதி கூறினார்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி அளித்துள்ள செய்தி குறிப் பில் கூறியிருப்பதாவது

இந்தியாவில் தீவிர போலியோ ஒழிப்பு திட்டத்தின் கீழ் போலியோ சொட்டு மருந்து முகாம் 1995 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடை பெற்று வருகிறது .தமிழக அரசின் தீவிர முயற்சிகளின் காரணமாக 2004 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில்எந்தகுழந்தையும்போலியோநோயால் பாதிக்கப்படவில்லைஇதனைதொடர்ந்து, இந்த ஆண்டு வருகிற 28ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற உள்ளது

இந்த முகாமின் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட 1 லட்சத்து 64 ஆயிரத்து908குழந்தைகளுக்குபோலியோ சொட்டு மருந் து வழங்கப்பட உள்ளது. இதற்காக நகர்ப்புறங்களில் 126 மையங்களு ம், ஊரக பகுதிகளில் 1,483 மையங்களும் என மொத்தம் 1,609 சொட்டு மருந்து மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன .இப்பணியில் 6,436 சொட்டு மருந்து வழங்கும் பணியாளர்களும் 217 மேற்பார்வையாள ர்களும் ஈடுபடுகின்றனர்

ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள் கோவில்கள், சுங்க சாவடிகள், மற்றும் மக்கள் கூடும் இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு சொட்டு மருந்து வழங்கப்படும்

தொலைதூர பகுதிகளில் வசிக் கும் குழந்தைகள் மற்றும் இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்கள் குடும்பங்களின் குழந்தைகளுக்கு 77 நடமாடும் குழுக்கள் மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. ஜூன் 28ஆம் தேதி அன்று பிறந்த குழந்தைகள் உட்பட இதற்கு முன்பு எத்தனை முறை போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் இந்த முகாமின் கூடுதலாக ஒரு தவணை போலியோ சொட்டு மருந்து கட்டாயம் செலுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது



## தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் 52வது பிறந்தநாளை முன்னிட்டு

# 5 குழந் தைகளுக்கு வெள்ளி கொலுசு, 100 குழந்தைகளுக்கு பரிசு பொட்டகம்: தஞ்சாவூர் எம்.எல்.ஏ விஜய் சரவணன் வழங்கினார்

தஞ்சாவூர் ஜூன் 28

தமிழக முதலமைச்சர் விஜய் 52வது பிறந்த நாள் முன்னிட்டு தஞ்சாவூர் இராசா மிராசுத்தார்மருத்துவமனையில்5குழந்தைகளுக்குவெள்ளிகொலுசும்,100குழந்தைகளுக்கு பரிசு பெட்டகம் ,புத்தாடை, டவல் ஆகியவற்றை தஞ்சாவூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும், தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் விஜய் சரவணன் வழங்கினார்

தஞ்சை மத்திய மாவட்ட கழக துணை செயலாளர் முருகேசன் மற்றும் தஞ்சை மத்திய மாவட்ட உறுப்பினர் சேர்க்கை அணி இணை ஒருங்கிணைப்பாளர் சுறா சுரேஷ் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்றது..

இந்நிகழ்வில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர். மணிமேகலா , அரசு இராசு மிராசுதார் மருத்துவமனை மருத்துவ அலுவலர் டாக்டர். அமுதவடிவு, மருத்துவமனை செவிலியர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் தஞ்சை மத்திய மாவட்ட கழகத்திற்கு உட்பட்ட பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் பங்கேற்றனர்.




# ஈரோட்டில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தொடங்கி வைத்தார்

ஈரோடு ஜூன் 28

போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி ஈரோடு அரசு ஆஸ்பத்திரி அருகே இருந்து புறப்பட்டது. இதை மாவட்ட ஆட்சியர் கந்தசாமி கொடி அசைத்து தொடங்கி வைத்தார். பெருந்துறை ரோடு வழியாக சென்ற இந்த பேரணிமாவட்டஆட்சியர்அலுவலகத்தை அடைந்தது .ஈரோடு எலைட் ஜேசிஸ் சங்கம் சார்பில் நடந்த இந்த பேரணியில் சிறப்பு விருந்தினராக முன்னாள் தேசிய தலைவர் வல்லப தாஸ் தலைமை விருந்தினர் மண்டல தலைவர் பிரேம் சரண் ஆகியோர் கலந்து கொண்டு போதைப்பொருள் பயன்படுத்துவதினால் ஏற்படும் தீமைகள் பற்றி பேசினர். மேலும் போதையில் லா தமிழகத்தை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இந்த பேரணியில் தலைவர் அறிவு செல்வி மற்றும் ஸ்ரீதர் மற்றும் துணைத்தலைவர்கள் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் ஈரோடு ஜேசிஸ் எலைட் உறுப்பினர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியில் தன்வந்திரி நர்சிங் கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தி சென்றனர். அதில் போதை பொருள் பயன்படுத்துவதினால் ஏற்படும் தீமைகள் பற்றியவாசகங்கள்எழுதப்பட்டுஇருந்தது.



ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் ஈரோடு மூலப் பாளையத்தில் ஆலோசனை கூட்டம் நடந்தது. அப்போது மாவட்ட தலைவர் முத்துக்குமார் நீட் தேர்வு வினாத்தாள் கசிவு மற்றும் தேர்வு ரத்து போன்ற குளறுபடிகளினால் மாணவ மாணவிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர் . இது குறித்து கிராமங்கள் தோறும் போராட்டம் நடைபெறும் என்று கூறினார். இதில் முன்னாள் எம் எல் ஏ ஆர் எம் பழனிசாமி மாவட்ட முன்னாள் தலைவர் மக்கள் ராஜன்,பாலு மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் .

## விளாத்திகுளம் அருகே

# இருசக்கர வாகன சக்கரத்தில் சேலை சிக்கி பெண் உயிரிழப்பு.

விளாத்திகுளம் ஜூன் 28.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள கீழநம்பியாபுரம் கிராமத்தை சேர்ந்த மாரியப்பன் என்பவரின் மனைவி கண்ணம்மாள் (50) மற்றும் அவரது மகள் ராமலட்சுமி(28), ராமலட்சுமியின் மகன் துருவன் வயது(1) ஆகியோர் கம்மாபட்டி கிராமத்திலிருந்து கீழநம்பியாபுரம்கிராமத்திற்குஒரேஇருசக்கரவாகனத்தில் மூன்று பேரும் சென்று கொண்டிருந்தனர்,இருசக்கர வாகனத்தை ராமலட்சுமி ஓட்டிசென்றுள்ளார். அப்போது விளாத்திகுளம் அருகே உள்ள வேலிடுபட்டி கிராமம் அருகே சென்று கொண்டிருந்தபோது ,கண்ணம்மாளின் சேலை எதிர்பாராத விதமாக இருசக்கர வாகன சக்கரத்தில் சிக்கியதில் குழந்தையை தூக்கி எறிந்து விட்டுகீழேவிழுந்ததில்படுகாயம்அடைந்தகண்ணம்மாள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து கண்ணம்மாளின் உடலை கைப்பற்றிய விளாத்திகுளம் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## பளுகல் அருகே

# போதைப்பொருள் விற்ற வாலிபர் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைப்பு

நாகர்கோவில், ஜூன். 28

விளவங்கோடு தாலுகாவுக்கு உட்பட்ட புலியூர்சாலை கிராமம் தேவிகோடு பகுதியை சேர்ந்தவர் கோபி மகன் சிஜூ (24). இவர் போதை பொருள் கடத்தல் மற்றும் விற்பனை போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார். இவர் மீது அருமனை காவல் நிலையத்தில் போதை பொருட்கள்தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. கைது செய்யப்பட்ட சிஜூ ஏற்கனவே பல்வேறு குற்றங்களில் தொடர்புடையவர் என்று விசாரணையில் தெரிய வந்தது.

குறிப்பாக கடந்த 2024 ஆம் ஆண்டு கொல்லங்கோடு காவல் நிலையத்தில் போதை பொருள் தடுப்பு சட்டம் மற்றும்சிறார்பாதுகாப்பு சட்டத்தின்கீழ் இவர்மீது வழக்கு உள்ளது. 2025 ஆம் ஆண்டு தக்கலை மதுவிலக்கு அமலாக்க பிரிவினரால் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக இவர் மீது மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து இவரை குமரி மாவட்ட எஸ்பி ஸ்டாலின் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க மாவட்ட கலெக்டருக்கு பரிந்துரை செய்தார். அவரது பரிந்துரை ஏற்று கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் பிரதாப் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்ட போதைப்பொருள் குற்றவாளி என வகைப்படுத்தி, குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கஉத்தரவிட்டார்.இதனைத்தொடர்ந்துஅருமனை போலீசார் சிஜூவை கைது செய்து பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைத்தனர்.

## அருமனை அருகே

# குளத்தில் தவறி விழுந்த தொழிலாளி உயிரிழப்பு

மார்த்தாண்டம், ஜூன். 28

அருமனை அருகே முக்கூட்டுகல் பகுதியை சேர்ந்தவர் ஷாஜி (58). கூலி தொழிலாளியான இவர் மனைவியை பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார். இவருக்கு தினமும் மது அருந்தும் பழக்கம் இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் மஞ்சாலுமூடு டாஸ்மாக் கடை அருகே உள்ள தாழக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் ஷாஜி மது அருந்தி உள்ளார். அதிக மது அருந்திய மயக்கத்தில் ஷாஜி தவறி குளத்தின் உள்ளே விழுந்துள்ளார்.

உடனே அருகில் இருந்தவர்கள் அவரை மீட்பதற்காக கயிறு போட்டுள்ளனர். ஆனால் போதை மயக்கத்தில் அவரால் கயிறை பிடிக்க முடியவில்லை. இதையடுத்து கரையில் நின்றவர்கள் அருமனை போலீசாரருக்கு தகவல் தெரிவித்தனர்.

போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்கள் உதவியுடன்ஷாஜியை மீட்டு வெளியே கரைக்கு கொண்டு வந்தனர். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஷாஜி ஏற்கெனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து அவரது மகன் சஜின் என்பர் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பூதப்பாண்டி அருகே

# அனுமதியின்றி மண் கடத்திய வக்கீல் மீது வழக்கு

நாகர்கோவில், ஜூன். 28

தோவாளை தாலுகா அனந்தபுரம் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட நிலங்கள் 'நாராயண பிள்ளை நினைவு அறக்கட்டளை' என்ற பெயரில் உள்ளன. இந்த நிலம் சிதறால் பகுதியை சேர்ந்த வாமதேவன் என்பவரின் மகன் வழக்கறிஞர் ராஜேஷ், மற்றும் ஆஷிஷ் அர்ஜுனன் நாயர் ஆகியோரது பெயரில் கூட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் ராஜேஷ் தனது சுயலாபத்திற்காக எவ்வித அரசு அனுமதி இன்றி இந்த நிலத்திலிருந்து தனது செங்கல் சூளைக்கு சட்ட விரோதமாக செம் மண் எடுத்து வந்துள்ளார். இது குறித்த தகவல் அறிந்த தோவாளை தாசில்தார் சிவகலா சம்பந்தப்பட்ட இடத்தை நேரத்தில் ஆய்வு மேற்கொண்டார்.கடந்த 13. 6. 2026 அன்று தாசில்தார் முன்னிலையில் நடத்தப்பட்ட அளவீட்டில் சுமார் 350 யூனிட் அதாவது 1140 கன மீட்டர் மண் சட்ட விரோதமாக தோண்டி எடுக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

இதன் மூலம் அரசுக்கு மிகப்பெரிய அளவில் வருவாய் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது தெரியவந்தது. இதை அடுத்து அந்த நிலத்திற்கு தாசில்தார் சீல் வைத்தார். இது குறித்து தாசில்தார் அளித்த புகாரின் பேரில் பூதப்பாண்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் மீனா விசாரணை நடத்தி, அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியது மற்றும் சட்ட விரோதமாக மண் கடத்தல் ஆகிய குற்றங்களுக்காக வழக்கறிஞர் ராஜேஷ் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.



## விவசாயிகள் பெயரில் பகல்இரவாக அரங்கேறும் மண் கொள்ளை:

# காவேரிப்பட்டணம் அருகே ஏரிகள் பாழாவதாக பொதுமக்கள் குமுறல்

கிருஷ்ணகிரி, ஜூன் 28

தட்ர அள்ளி கிராமத்தில் அடுத்தடுத்து இரண்டு பெரிய ஏரிகள் அமைந்துள்ளன. இந்த ஏரிகளில் அரசாணையை முற்றிலும் மீறி, ஜே.சி.பி (JCB) எந்திரங்கள் மூலம் இரவுபகலாகஏரியின்மார்புபிளக்கப்பட்டு, ஆழமாக மண் தோண்டி எடுக்கப்பட்டு வருகிறது.

அனுமதி அளிக்கப்பட்ட அளவை விட ப ல மடங்கு கூடுதலாக, பிரம்மாண்ட டிப்பர்லாரிகள்மற்றும்டிராக்டர்கள்மூலம் மண் கடத்தப்பட்டு வருகிறது. பகல் நேரத்தில் விவசாய நிலங்களில் கொட்டப்படுவது போல் கொட்டிவிட்டு, இரவு நேரங்களில் அதே மண்ணை டிராக்டர்கள் மூலம் பல்வேறு வணிக இடங்களுக்கு எவ்வித அனுமதியும் இன்றி சட்டவிரோதமாக கடத்தி விற்பனை செய்து வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஏரிகளில் விதிகளை மீறி ராட்சத எந்திரங்கள் கொண்டு ஆழமாகத் தோண்டுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து சமூக ஆர்வலர்கள் கடும் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும்ஏரியின்சமதளம்பாதிக்கப்பட்டு, குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே கிணறு போல ஆழமான பள்ளங்கள் ஏற்படுகின்றன. இதனால் மழைக்காலங்களில் தண்ணீர் ஏரி முழுவதும்பரவலாகத்தேங்காமல், அந்தப் பள்ளங்களுக்குள் மட்டுமே முடங்கிவிடும். ஏரிப் பரப்பு முழுவதும் தண்ணீர் தேங்காததால், சுற்றியுள்ள நூற்று க்க ணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்குப் பாய வேண்டிய பாசன நீர் முற்றிலுமாகப் பாதிக்கப்படும். மேலும் நீர் பரவாமல் போவதால் சுற்றியுள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளின் நிலத்தடி நீர் மட்டம் கடுமையாகச் சரியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சமூக ஆர்வலர்களும் பலமுறைசம்பந்தப்பட்டவருவாய்த்துறை மற்றும் கனிமவளத்துறை அதிகாரிகளுக்குப் புகார் அளித்துள்ளனர். இருப்பினும், இதுவரை எந்தவொரு அதிகாரியும் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிடவோ அல்லது மண் அள்ளுவதைத் தடுக்கவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. அதிகாரிகளின் இந்தமௌனம்,மண்கடத்தல்காரர்களுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார்களோ என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் பலப்படுத்தியுள்ளது.

அரசின் சலுகையைத் தவறாகப் பயன்படுத்தி, ஏரிகளை அழித்து, எதிர்கால விவசாயத்தைக் கேள்விக்குறியாக்கும் இந்தச் சட்டவிரோத மண் கடத்தலை கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும். மாவட்ட ஆட்சியர் உடனடியாக சிறப்புப் படைகளை அனுப்பி, தட்ரஹள்ளி ஏரிகளில் ஆய்வு மேற்கொண்டு, விதிமீறலில் ஈடுபட்ட எந்திரங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்றும், இதற்குத்துணையாகஇருக்கும்அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்களும், தட்ரஹள்ளி கிராம மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணி ஆய்வு

தருமபுரி ஜூன் 28

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணி நேரில் ஆய்வு மேற்கொண்டு மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளை பார்வையிட்டு, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும்அடிப்படைவசதிகள்,கட்டமைப்புகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, மனநலப் பிரிவு உள்ளிட்ட முக்கிய பிரிவுகளை பார்வையிட்டார். மேலும், அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் மருத்துவ சேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். பின்னர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் மனோகரன் மற்றும் மருத்துவர்களுடன் கலந்துரையாடி, மருத்துவமனையின் தற்போதைய செயல்பாடுகள், தேவைகள் மற்றும் மேம்பாட்டு பணிகள் குறித்து விவரங்களை கேட்டறிந்தார்.

அப்போது சௌமியா அன்புமணி பேசியதாவது:

தருமபுரி மாவட்டம் சிறிய மாவட்டமாக இருந்தாலும், ஔவைக்கு நெல்லிக்கனி வழங்கிய அதியமான் மூலம் வரலாற்றில் தனித்த அடையாளம் பெற்ற மாவட்டமாகும். அதேபோன்று தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அதிகளவில் உடல்உறுப்புதானங்களைபெற்றுசாதனை படைத்து வருகிறது. இது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

மருத்துவ சேவையை மேலும் மேம்படுத்தி, தரமான சிகிச்சை வசதிகளை பொது மக்களுக்கு வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கட்டமைப்பு மற்றும் மருத்துவ வசதிகளை மேலும் உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

இந்த ஆய்வின் போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். பி. வெங்கடேஸ்வரன், மருத்துவர்கள், மருத்துவ அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# திருவட்டாறு அருகே விபத்தில் வாலிபர் படுகாயம்

மார்த்தாண்டம், ஜூன். 28

திருவட்டாறுஅருகேஉள்ளசெறுவல்லூர் பகுதியை சேர்ந்தவர்ஏசுதாசன்மகன்நிபின் (30). இவர்கார்ஓட்டுனராகபணிபுரிகிறார். இவர் கடந்த ஜூன் 25ஆம் தேதி மாலை 4:30 மணி அளவில் தனது காரில் ஆற்றூரிலிருந்து தேமானூர் ஆற்றுப்பாலம் வழியாக அருமனை நோக்கி சென்று கொண்டிருந்தார். கார் ஆற்றுப்பாலத்தின் மேல் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் அதே திசையில் வந்த ஒரு இருசக்கர வாகனம் எதிர்பாராத விதமாக நிபின் காரின் இடது பக்க முன் கதவில் மோதி விபத்துக்குள்ளானது.

விசாரணையில் சிதறால் பகுதியை சேர்ந்த ஜான்சன் என்பவரின் மகன் ஜோஸ் (38) என்பவர்தனது இருசக்கரவாகனத்தில் செல்போனில் பேசியபடி அஜாக்கிரதையாக ஓட்டி வந்ததே இந்த விபத்துக்கு காரணம் என தெரிய வந்தது.

காரின் மீது மோதிய வேகத்தில் பைக்கில் இருந்து தூக்கி வீசப்பட்ட ஜோஸ் கீழே விழுந்ததில் அவரது வலது பக்க தலை மற்றும் வலது தோள்பட்டையில் பலத்த காயங்கள்ஏற்பட்டது.அவரைஉடனடியாக மீட்டு நெய்யாற்றின் கரையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இது குறித்த கார் ஓட்டுநர் நிபின் அளித்த புகாரின் பேரில் திருவட்டாறு போலீசார் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்திய ஜோஸ் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஓய்வு பெற்ற குற்ற வழக்கு

# தொடர்பு துறை கண்காணிப்பாளருக்கு கொலை மிரட்டல்



வேலூர் ஜூன்28

வேலூர் சத்துவாச்சாரி நேதாஜி நகரில் வசித்து வருபவர் ஜெயவேலு குற்ற வழக்கு தொடர்பு துறையில் கண் காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவர் சத்துவாச்சாரி ரங்காபுரம் அருகே மூலக் கொல்லை பகுதியில் புன்செய் சர்வே எண்.601/2 மற்றும் அதை ஒட்டிய இதர நிலங்களை சொந்தமாக வாங்கியுள்ளார். இந்த இடத்தில் விவசாயம் செய்ய திட்டமிட்டு அவரது இடத்தின் முன்பு கேட் அமைத்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அந்தப் பகுதியை சேர்ந்த சிலர் நீங்கள் யார் இங்கு வந்து இடம் வாங்குவதற்கு இடத்தை உடனடியாக காலி செய்து சென்று விடு என மிரட்டி உள்ளனர். இது குறித்து ஓய்வு பெற்ற கண்காணிப்பாளர் ஜெயவேலு சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்துள்ளார் அந்த புகாரின் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை இந்த நிலையில் இரண்டு மாதங்களுக்கு பிறகு மீண்டும் அப்பகுதியை சேர்ந்த கணேசன்,பாஸ்கர், J.C.B. டிரைவர் ஞானவேல் ஆகியோர் என் இடத்திற்கு உள்ளே செல்ல விடாமல் வழிமறித்து என்னை தடுத்து என் இடத்திற்கு முன்பு சுமார் 25 அடி அகலம் 5 அடி நீளம் 3 அடி ஆழத்தில் J.C.B வண்டி வைத்து பள்ளம் எடுத்து என் இடத்திற்கு செல்ல விடாமல் என்னை சட்ட விரோதமாக தடுத்து நிறுத்தி அசிங்கமான தகாத ஆபாச வார்த்தைகளால் மிரட்டி உன்னை இங்கேயே கொன்று உன் இடத்திலேயே புதைத்தால் தான் எங்கள் அண்ணன் சிவாஜி நிம்மதியாக இருக்க முடியும் என்று சொல்லி என்னையும் என்னுடன் வந்த என் நண்பராகிய சாரதி என்பரையும் அடிக்க வந்தனர்.

நாங்கள் உடனடியாக அங்கிருந்து தப்பித்து ஓடி வந்து காவல் அவசர உதவி என்ணை அழைத்து சிவாஜி என்பவரின் தூண்டுதலின் பேரில் அப்பகுதியை சேர்ந்தவர்கள் என்னை மிரட்டுகிறார்கள் என தகவல் அளித்தோம் சம்பவ இடத்திற்கு போலீசார் வருவதற்குள் பிரச்சனை செய்த நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர்.

எனவே என் சொந்த இடத்திற்கு என்னை செல்ல விடாமல் என் இடத்திற்கு முன்பு ஜேசிபி மூலம் பள்ளம் தோண்டி என்னையும் என் நண்பரையும் ஆபாசமாக மிரட்டி கொலை மிரட்டல் விடுத்த நபர்களின் மீதுஉரியநடவடிக்கைஎடுக்குமாறுவேலூர்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தனர் புகாரை பெற்றுக் கொண்ட துணை காவல் கண்காணிப்பாளர் புகார் குறித்து விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.

ஓய்வு பெற்ற குற்ற வழக்கு தொடர்பு துறை கண் காணிப்பாளருக்கு இப்படி ஒரு நிலைமை என்றால் சாதாரண பொது மக்களின் நிலை கேள்விக்குறிதான்.

# டிராவல் ஏஜென்ட் வீட்டில் ரூ 1லட்சம், நகைகளை கொள்ளையடித்த பேஸ்புக் நண்பர்

நாகர்கோவில், ஜூன். 28

கன்னியாகுமரி அருகே மயிலாடி மிஷன் காம்பவுண்ட் பகுதியை சேர்ந்தவர் தர்மலிங்கம் என்ற ரவி (50). இவர் டிராவல் ஏஜன்ட்டாக பணிபுரிந்து வருகிறார். தற்போது குடும்பத்தை பிரிந்து தனியாக வசித்து வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன்பு பேஸ்புக் வழியாக கன்னியாகுமாரியை சேர்ந்த மணிகண்டன் என்பவர் ரவிக்கு அறிமுகம் ஆகியுள்ளார். இருவரும் முகநூல் வாயிலாக பேசி நண்பர்களாக பழகி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் மணிகண்டன் மற்றும் நண்பர்கள் 3 பேருடன் ரவியின் வீட்டிற்கு வந்துள்ளார். ரவியின் வீட்டில் உள்ள பூஜை அறையில் சுமார் 15 லட்சம் ரூபாய் ரொக்க பணம் வைக்கப்பட்டுள்ளது அவர்களுக்கு தெரிய வந்துள்ளது. ரவியின் கவனத்தை திசை திருப்பிய மணிகண்டன்மற்றும்அவரது நண்பர்கள்பூஜைஅறையில் இருந்த பணத்திலிருந்து ஒரு லட்ச ரூபாய் ரொக்க பணம், ஒன்றரை பவுன் தங்க மோதிரம் மற்றும் அவரது விலை உயர்ந்த செல்போன் ஆகியவற்றை திருடி கொண்டு தப்பி ஓடினர். நம்பிக்கை அடிப்படையில் வீட்டிற்கு அழைத்த நண்பரே கைவரிசை காட்டியதை கண்ட அதிர்ச்சியடைந்த ரவி இது குறித்து அஞ்சு கிராமம் போலீஸ் நிலையத்தில் புகார்அளித்தார். புகார்என்பேரில்போலீசார்மணிகண்டன் மற்றும் அடையாளம் தெரிந்த 3 பேர் மீது மோசடி, திருட்டு வழக்கு பதிவு செய்துள்ளனர். முகநூல் போன்ற சமூக வலை தளங்களில் அறிமுகமான முன்பின் தெரியாது நண்பர்களை நம்பி வீட்டிற்கு அழைக்க வேண்டாம் என போலீசார் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

# ஈரோடு வழியாக திருச்செந்தூருக்கு நேரடி ரெயில் விட வேண்டும்: ரெயில்வே அமைச்சருக்கு கோரிக்கை

ஈரோடு ஜூன் 28

ஈரோட்டில் இருந்து விருத்தாசலம் மார்க்கத்திற்கு நேரடி ரயில் வசதி இல்லை. பயணிகள் சேலம் சென்று மாறி பயணிக்க வேண்டியுள்ளது.

எனவே இந்த ரெயிலை ஈரோட்டில் இருந்து இயக்கினால் பயணிகளுக்கு பெரும் பயனாக இருக்கும். கோவை – சென்னை வந்தே பாரத் ரயிலில் கூடுதல் பெட்டிகள் இணைக்க வேண்டும். கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் பகுதி மக்கள் திருச்செந்தூர் செல்ல நேரடி ரயில் வசதி இல்லாமல் மதுரை அல்லது தூத்துக்குடியில் இருந்து மாறி செல்ல வேண்டியுள்ளது.

எனவே, கோவை – திருப்பூர் – ஈரோடு – கரூர் – மதுரை வழியாக திருச்செந்தூருக்கு புதிய பகல் நேர பயணிகள் ரயில் அல்லது இரவு நேர படுக்கை வசதி கொண்ட விரைவு ரெயில் இயக்க வேண்டும் .

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கன்னியாகுமரியில் செட்டிநாடு உணவு திருவிழா

## அமைச்சர் செ.ராஜேஷ் குமார் துவக்கினார்



நாகர்கோவில், ஜூன். 28

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் குமரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கன்னியாகுமரியில் உள்ள ஹோட்டல் தமிழ்நாடு வளாகத்தில் 2 நாட்கள் செட்டி நாடு உணவுத்திருவிழா நடைபெறுகிறது. இந்த விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் குத்துவிளக்கேற்றி, துவக்கி வைத்தார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தமிழகத்தின் பாரம்பரிய சமையல் கலாச்சாரத்தை பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் "செட்டிநாடுஉணவுத் திருவிழா மாநிலம் முழுவதும் உள்ள ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களில் நேற்றும் இன்றும் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. செட்டிநாட்டு சமையல் உலகப் புகழ் பெற்ற தனித்துவமான சுவை, மணம் மற்றும் பாரம்பரிய சமையல் முறைகளுக்காக அறியப்படுகிறது. அந்த வகையில், இந்த ஆண்டு உணவுத் திருவிழாவில் செட்டி நாட்டு பாரம்பரிய உணவுவகைகள பொது மக்களுக்காக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விறகு அடுப்பில் சமைத்து பாராம்பரி முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த உணவுத்திருவிழா மதிய உணவு மற்றும் இரவு உணவு வேளைகளில் நடைபெறும். இவ்விழா தமிழ்நாடு முழுவதும் 20 ஹோட்டல் தமிழ்நாடு உணவகங்களில் நடைபெறுகிறது. என அமைச்சர் கூறினார்.

தொடர்ந்து அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பாரம்பரிய முறையில் உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் உரல், அம்மி, உலக்கை உள்ளிட்ட பாரம்பரிய கருவிகளை பார்வையிட்டார்கள்.

விழாவில் சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் லட்சுமி பிரியா, மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், அரசு அலுவலர்கள், சுற்றுலா பயணிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# மதுரை மாவட்டத்தில் அனைத்துத்துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அமைச்சர் ஆய்வு

மதுரை, ஜூன் 28

எரிசக்தி மற்றும்சட்டத்துறைஅமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்திற்குமதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை, மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.தங்கப்பாண்டி, மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சோ.கார்த்திகேயன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.கோபிசன், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ம.விஜய், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், மாநகர காவல் ஆணையாளர் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.தேவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நீர்வளத்துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, இயற்கை வளத்துறை, எரிசக்தித் துறை (ஊரகம் மற்றும் நகர்ப்புறம்), வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, பொதுப்பணித்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, வங்கிகள், இந்து சமய அறநிலையத் துறை, சுற்றுலாத்துறை போன்ற அனைத்துத் துறை அலுவலர்களுடன் அரசின் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் தெரிவித்ததாவது:

"அனைத்துத்துறைகள் சார்பில் அனைத்துத்துறை அலுவலர்களுடன் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

அப்போது, அனைத்துத்துறை அலுவலர்களிடமிருந்து பொதுமக்களின் தேவைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான கோரிக்கைகள் பெறப்பட்டன. பெறப்பட்ட கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், மின்சாரத்துறையின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில், மின்சாரத் துறையின் மொத்தக் கடன் நிலவரம், காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை, செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் உள்ளிட்ட விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கிணங்க நெல் கொள்முதல் நிலையங்களை அதிகளவில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், தனியார் நெல் கொள்முதல் நிலையங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், விவசாயிகளின் குறைகளை விரைவில் தீர்க்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

முன்னதாக, மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

அதன் விவரம் பின்வருமாறு:

தோட்டக்கலைத்துறை: 3 பயனாளிகளுக்கு ரூ. 1,14,000/ மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறை: 4 பயனாளிகளுக்கு ரூ. 1,70,000/ மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்.

வேளாண்மைத்துறை: 3 பயனாளிகளுக்கு ரூ. 12,100/ மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகள்.

மாவட்ட வழங்கல் அலுவலகம்: 20 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்: 8 பயனாளிகளுக்கு ரூ. 46,256/ மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்.

ஊரக வளர்ச்சித்துறை: 11 பயனாளிகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத் துறை: 2 பயனாளிகளுக்கு ரூ. 92,400/ மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள். ஆக மொத்தம் 51 பயனாளிகளுக்கு ரூபாய் 4,34,756/ மதிப்பீட்டிலான நலத்திட்டஉதவிகள்வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன் மற்றும் அனைத்துத்துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேரூர் பேரூராட்சி மூலம் ஆயிரம் மரக்கன்றுகளுக்கு மேல் நடவு செய்ய இலக்கு

## எல்லா பேரூராட்சிகளிலும் இதுபோல மரக்கன்றுகள் நடவு செய்ய பொதுமக்கள் கோரிக்கை



சுசீந்திரம்.ஜீன்28

தமிழ்நாட்டில் வனப் பரப்பை அதிகப்படுத்திபசுமைபோர்வையைவிரிவுபடுத்தும் நோக்கில் பசுமை தமிழ்நாடு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. நாட்டு மர வகைகள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளையும், இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளவும் அப்பேரிடர்களில் இருந்து மக்களை பாதுகாக்கும் திறன் கொண்டதாகவும் திகழ்வதால் அதிக அளவிலான நாட்டு மரங்கள் நடுவதை ஊக்குவிப்பது பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்த இயக்கத்தின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகள், கல்வி நிறுவனங்கள், கோயில் நிலங்கள், ஏரிக்கரைகள் மற்றும் நீர் பிடிப்பு பகுதிகள், ஆற்றுப்படுகைகள் மற்றும் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் உள்ளூர் மர வகைகள் நடப்பட்டு வருகிறது. அதன்படி தேரூர் பேரூராட்சி பகுதியில் ஆயிரம் மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு பேரூராட்சி நிர்வாகம் மூலம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

அதன்படி தேரூர் பேரூராட்சி சுசீந்திரம் வெள்ளமடம் சாலையில் பேரூராட்சி செயல் அலுவலர் சங்கர சுப்பிரமணியன் அவர்களால் நாவல் மரக்கன்றுகள் நடப்பட்டது. தேரூர் பேரூராட்சி மூலம் சுசீந்திரம் வெள்ளமடம் சாலையில் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டின் இருபுறமும் நடப்பட்ட புங்கன் மரக்கன்றுகள் தற்போது வளர்ந்து பார்ப்பதற்கு அழகாக உள்ளது இதுபோல எல்லா பேரூராட்சிகளிலும் மரக்கன்றுகளை நட்டு கன்னியாகுமரி மாவட்டத்தை பசுமை நிறைந்த மாவட்டமாக மாற்ற வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது

# போதை பொருள் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் பேரணி



இராமநாதபுரம், ஜூன் 28

இராமநாதபுரம் ஆயுதப்படை மைதான வளாகத்தில் ( மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், மாணவ, மாணவிகள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற போதை பொருள் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர்மா. சிவகுரு பிரபாகரன் தொடங்கி வைத்து, மாரத்தானில் பங்கேற்றார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் வ. சங்கரநாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இப்பேரணியானது ஆயுதப்படை மைதான வளாகத்தில் தொடங்கி டி. பிளாக், பாரதிநகர், ரோமன்சர்ச் வழியாக சென்று ராஜா மேல்நிலைப்பள்ளி மைதானத்தை சென்றடைந்தது. முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் ஆயுதப்படை மைதானத்தில் போதைப் பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த விழிப்புணர்வு பதாகையில் கையொப்பமிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாணவ, மாணவிகள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள், காவல்துறையினர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

தேனி மாவட்டத்தில்

# உப்பார்பட்டி தப்புகுண்டு சிப்காட் உணவுப் மரு.இரா.வைத்திநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு



தேனி, ஜூன் 28

தேனி மாவட்டம், திண்டுக்கல்குமுளி தேசிய நெடுஞ்சாலையில் (NH183) உப்பார்பட்டிதப்புக்குண்டுபூமலைக்குண்டு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியப் பகுதியில் அமைந்துள்ள சிப்காட் உணவுப்பூங்காவில் இன்று (27.06.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

உப்பார்பட்டி தப்புக்குண்டு பூமலைக்குண்டு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியப் பகுதியில் அமைந்துள்ள சிப்காட் உணவுப்பூங்காவினை மாவட்ட ஆட்சித்தலைவர் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் உணவுப் பூங்காவில் தொழில் நிறுவனங்கள் செயல்படுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள சாலைவசதிகள், தெருவிளக்குகள், மின்சார வசதிகள், உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் குறித்தும், மேலும், உணவுப்பூங்காவிற்கு, முல்லைப் பெரியாற்றிலிருந்து (கிணறு மற்றும் இயல்புநீர்சேகரிப்புத் தொட்டி மூலம்) பிரதான குழாய் வழியாக சுத்திகரிப்பு நிலையத்தில் (Water Treatment Plant) சுத்திகரிப்பு செய்யப்பட்டு தினசரி குடிநீர் வழங்கும் பொருட்டு, சோதனை ஓட்டம் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, விரைவில் தொழில் நிறுவனங்களுக்கு சீரான குடிநீர் வழங்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக சிப்காட் உணவுப்பூங்காவில் செயல்படும் தொழில் நிறுவனங்களுக்கு சீரான மின்சார விநியோகம் செய்யும் வகையில் 110/22KV திறன் கொண்ட துணை மின்நிலையம் அமைக்கப்பட உள்ள இடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு,

தொழில் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இவ்வாய்வில், திட்ட அலுவலர் (சிப்காட்) .சித்திரைவேல், வட்டாட்சியர் (தேனி) சதீஸ்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம் வேலூர் மாநகராட்சி விருப்பாட்சிபுரம்பேருந்துபயணியர் நிழற்குடம்அருகில் புதிய ஸ்ரீ.முருகன்.டீ ஸ்டால் மற்றும் டிபன் சென்டர்திறப்பு விழா மிக கோலகாலமாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.மு.வினோத் கண்ணன் கலந்து கொண்டு புதியகடை யை திறந்து வைத்தார்இதில் த.வெ.ககட்சியின் இணை செயலாளர். சீனிவாசன்.எஸ் நவீன். உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் திறப்பு விழாவிற்கு வருகை புரிந்த சிறப்பு அழைப்பாளர்களுக்குகடை உரிமையாளர் குடும்பத்தினர்சால்வை அணிவித்து மரியாதை செலுத்திவரவேற்றனர்.மேலும் கடை திறப்பு விழா முன்னிட்டு ரூபாய் 200 க்கு மேல்.டீ மற்றும் டிபன் வாங்கும்சுமார் 50 நபர்களுக்குவெள்ளி நாணயம் குலுக்கள் முறையில்வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

### தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்கம் சார்பில்

# பத்தாவது மாவட்ட பேரவை கூட்டம் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது




கிருஷ்ணகிரி ஜூன் 29:

கிருஷ்ணகிரியில் பத்தாவது மாவட்ட பேரவை கூட்டமானது தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில்தனியார்திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் கோவிந்த ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாநில செயற்குழு உறுப்பினர் சென்னப்பன் வரவேற்புரை ஆற்றினார் மாவட்டத் தலைவர் சரவணன் துவக்கு உரையாற்றி மாவட்ட செயலாளர்கோபால கண்ணன் செயல் அறிக்கையும் மாவட்ட பொருளாளர் ஜேம்ஸ் குமார் நிதிநிலை அறிக்கையும் வாசித்தனர். மாநிலத் துணைத்தலைவர்தினேஷ் மாவட்ட தலைவர்நந்தகுமார் மாவட்ட செயலாளர்கல்யாணசுந்தரம் மாவட்ட செயலாளர் ஜெகதாம்பிகா வட்டார வளர்ச்சி அலுவலர் ஒருங்கிணைப்பாளர் லட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்தக் கூட்டத்தில் அஞ்செட்டி மற்றும் போச்சம்பள்ளியில் வட்டார வளர்ச்சி அலுவலகம் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டும், ஊராட்சி நிலையில் உதவி இயக்குனர் காலி பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும், ஊரக வளர்ச்சித்துறையில் உள்ள காலிப்படை இடங்களை நிரப்பிட வேண்டும், ஊரக வளர்ச்சி மாவட்ட நேர்முக உதவியாளர் பணிகள் தொடர்பான தொகையை விடுவிக்க புது உத்தரவுக்கு பதில் பழைய உத்தரவையை தொடர வேண்டும்,

அப்படி இல்லையெனில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர் பணியிடம் நியமனம் செய்ய வேண்டும், உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன மாவட்ட இணை செயலாளர் முனிராஜ் தீர்மானங்களை முன்மொழிந்தார். இறுதியில் மாவட்ட துணைத் தலைவர் சண்முகம் நன்றியுரை ஆற்றினார்.



# சென்னை திறந்த நிலை பல்கலைக்கழகத்திற்கு கண்ணதாசன் பெயரை சூட்ட வலியுறுத்தல்

தஞ்சாவூர் ஜூன் 28

சென்னை திறந்த நிலை பல்கலை க்கழகத்துக்கு கவிஞர் கண்ண தாசன் பெயரை சூட்ட வேண்டும் என கண்ணதாசன் நூற்றாண்டு மாநாட்டுக்குழு மதிப்பு தலைவர் பேராசிரியர் சரஸ்வதி ராமநாதன் வலியுறுத்தினார்

தஞ்சாவூர் மாவட்டம் திருவை யாறு ஔவை கோட்டத்தில் நடைபெற்ற கண்ணதாசன் ஆய்வு இருகையும் ,கண்ணதாசன் நூற்றாண்டு தொடக்க விழாவின் தொடங்கி வைத்து பேராசிரியர் சரஸ்வதி ராமநாதன் பேசியதாவது

மக்களிடையே பெரும் செல்வாக் கு பெற்றவரும் பாமரர்களின் பல்கலைக்கழகமாக விளங்கிய வருமான கவியரசர் கண்ணதாசன் பெயரை சென்னை திறந்த நிலை பல்கலைக்கழகத்திற்கு சூட்டி கண்ணதாசன் திறந்த நிலை பல்கலைக்கழகம் என அறிவிக்கப் பட்டு கண்ணதாசனுக்கு பெருமை சேர்க்க வேண்டும்

கண்ணதாசன் வரலாறு படைப்பி லக்கியம் குறித்து 100 நூல் ஆவண ங்களை வெளியிட திட்டமிட்டு வருகிறோம். வாரம் தோறும் சனிக் கிழமை இணைய வழி நிகழ்ச்சி நடத்தவும் உள்ளோம் . காரைக்குடி கண்ணதாசன் மணிமண்டபத்தில் செப்டம்பர் 5ஆம் தேதி 1,000 கவிஞர்கள் பங்கேற்கும் கவியரங்கம் நடைபெற உள்ளது .திருவையாறு ஔவைக்கோட்டத்தில் கண்ண தாசன் சிலை அக்டோபர் 17ஆம் தேதி நிறுவப்பட உள்ளது

மலேசியாவில் கண்ணதாசன் ஆய்வு மாநாடு 2027 ஜனவரி 1 ,2 தேதிகளிலும், பொள்ளாச்சியில் பன்னாட்டு கருத்தரங்கம் ஜனவரி இறுதி வாரத்திலும் நடத்தப்பட உள்ளது .இந்தியாவின் முக்கிய நகரங்களில்கண்ணதாசனின்மாங்கனி, கிருஷ்ண லீலா, கண்ணதாசன் காப்பியங்கள் நாட்டிய நாடகமாக அரங்கேற்ற உள்ளது என்றார் பேராசிரியர் சரஸ்வதி இராமநாதன்.

இவ்விழாவிற்கு ஔவை கோட்ட நிறுவனர் முனைவர் மு கலை வேந்தன் தலைமை வகித்தார். முன்னதாக தமிழாசிரியர் தீபா வரவேற்றார். நிறைவாக தலைமை ஆசிரியை கோகிலா நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை ஔவை அறக்கட்டளை தலைவர் கண்ணகி செய்தார்.

### காட்பாடியில்

# வேலூர் பஜார் 2 கண்காட்சி துவக்கம்




வேலூர், ஜூன் 28

வேலூர் மாவட்டம் காட்பாடியில் அமைந்துள்ள ரங்கலாயா திருமண மண்டபத்தில் வேலூர் பஜார் கண்காட்சி நிகழ்ச்சி ஜூன் 27, 28 இரண்டு நாட்கள் நடைபெறுகிறது.

இதன் துவக்க விழாவில் காட்பாடி எம் எல்ஏ எம்.சுதாகர், தவெக மாவட்ட செயலாளர்கள் வேல்முருகன்(வேலூர் மேற்கு), ஆ.நவீன்(வேலூர் கிழக்கு) ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி கண்காட்சியை தொடங்கி வைத்தனர்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில் 65க்கும் மேற்பட்ட விற்பனை அரங்குகள், 8க்கும் மேற்பட்ட உணவு அரங்குகள், அமைக்கப்பட்டுள்ளது. மேலும் புடவைகள், குர்தாக்கள், வளையல்கள், ஃபேஷன் ஆக்சஸரீஸ் மற்றும் பல்வேறு தயாரிப்புகளான வெள்ளி நகைகள், ஓவியங்கள், ஆர்ட்ஸ் ஸ்பேஸ், செல்லப்பிராணிகள் உள்ளிட்ட ஏராளமானவைகள் இடம் பெற்றிருந்தன.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை ஏற்பாட்டாளர்கள் ஸ்ருதி, சேதன் மற்றும் கவிதா ஆகியோர் செய்திருந்தனர். விழாவிற்கு ஸ்பான்சர்களாக எம்என் ஜுவல் பார்க், பென் மோட்டார் ஜோன், ஆர்ட்ஸ்(ம) ஆர்டிகிராப்ட்ஸ், பாஷ், அகிரு, ஜெயின் சாட்ஸ், ஹேப்பி பாக்ஸ் பல்வேறு பங்களிப்பை செய்துள்ளனர்.



# பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தில் சூரிய ஒளி மின் நிலையம் தொடக்கம்

தஞ்சாவூர் ஜூன் 28

தஞ்சாவூர் அருகே உள்ள வல்லம் பெரியார் மணியம்மை நிகர் நிலை பல்கலைக் கழகத்தில் சூரிய ஒளி மின் நிலையம் தொடங்கப்பட்டது இந்த பல்கலைக்கழகத்தின்மேற்கூறையில்பெங்களூரு இம்விபோட்டோ வோல்டாயிக் பவர் நிறுவனத்தின் உதவியு டன் அமைக்கப்பட்ட புதுப்பிக்க வல்ல 220 கிலோவாட் சூரிய ஒளி மின் நிலையத்தை தொடங்கி வைத்த பல்கலைக்கழகவேந்தர் வீரமணி பேசியதாவது: இந்த சூரிய ஒளி மின் நிலையத் தின் மூலம் நாள்தோறும்1,000 முதல் 1,100 யூனிட்டுகள் மின்சாரம் உற் பத்தி செய்யப் படுகிறது. பல்கலைக் கழக வளாகத்தில் நாள் தோறும் 3,000 யூனிட்டுகள் மின் நுகர்வு தேவைப்படுகிறது .

இந்நிலையில் இந்த சூரிய ஒளியை மின் நிலைய ம் மூலம் மூன்றில் ஒரு பங்கு மின்சாரம் சேமிக்கப்படுகிறது புதிதாக நிறுவப் பட்டுள்ள சூரிய ஒளி சக்தி மூலம் 2,000 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதால் ஆண்டுதோறும் 292 டன் கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றம் குறைக்கப்படுகிறது .இதன் மூலம் பசுமை குடில் வாயு வீழ்வது கட்டுப்படுத்தப்படுகிறது. என்றார் வீரமணி. நிகழ்ச்சியில் பெங்களூர் இம்விபோட்டோ வோல்டாயிக் பவர் நிறுவனம் மணி, கிரிதர் கோபாலன், உன்னிக்குமார், பல்கலைக்கழக இணைத் வேந்தர் மல்லிகா ,பதிவாளர் ஸ்ரீவித்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



# பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில் "We The Leaders"உறுப்பினர் சேர்க்கை முகாம்

### முன்னாள் எம் பி நரசிம்மன் பங்கேற்று உறுப்பினர் அட்டைகள் மற்றும் தென்னங்கன்றுகளை வழங்கினார்

தருமபுரி ஜூன் 28

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாப்பாரப்பட்டியில் " We The Leaders Lead The Ciange அறம் செய்ய விரும்பு" என்ற முழக்கத்துடன் புதிய அலுவலகம் திறப்பு விழா மற்றும் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை வழிகாட்டுதலின்படி இயக்கத்தின் அமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், மக்கள் மத்தியில் சமூக பொறுப்புணர்வை ஏற்படுத்துதல், புதிய உறுப்பினர்களை இணைத்து அமைப்பை வலுப்படுத்துதல், நோக்கின் இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் மக்கள் மத்தியில் சமூக பொறுப்புணர்வை ஏற்படுத்துதல், புதிய உறுப்பினர்கள் இணைத்து அமைப்பை வலுப்படுத்துதல், இளைஞர்களை பொது சேவையில் ஈடுபடுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவித்து சமூக மாற்றத்திற்கான மக்கள் இயக்கமாக உருவாக்குதல் ஆகும். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. நரசிம்மன் கலந்துகொண்டு புதிய அலுவலகத்தை திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்று புதிதாக இணைந்த உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டை மற்றும் தென்னங்கன்றுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் உரையாற்றியவர் சமூக சேவையும், மக்கள் நல பணிகளையும் முன்னிறுத்தி அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே மாவட்டத்தின் வளர்ச்சி சாத்தியமாகும் என்றும், இளைஞர்கள் சமூக மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். "மாறுவோம்! மாற்றுவோம்! தருமபுரி மாவட்டத்தை வலுப்படுத்துவோம்!" என்ற முழக்கத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் தமிழ்நாட்டின் மிகப்பெரிய புயலாக ஒரு இயக்கம் நம் தலைவர் அண்ணாமலை அவர்களால் ஆரம்பித்து 15 நாட்களுக்குள் 20 லட்சம் பேர் உறுப்பினர்களாகி உள்ளனர் .இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக பாலக்கோடு பென்னாகரம் சட்டமன்ற தொகுதியின் உறுப்பினர்கள் சேர்க்கை பணிகள் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து இப்பகுதியில் உள்ள பாமர மக்கள், இளைஞர்கள், விவசாய மக்களும், பெண்களும் இதில் உறுப்பினர் சேர விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கின் இங்கு உறுப்பினர் சேர்க்கை பணி நடந்து வருகிறது. இந்த இயக்கத்தில் பல்வேறு அரசியல் கட்சியில் இருந்து உறுப்பினர்களாக இணைந்து வருகின்றனர். இந்த இயக்கம் சமூக சேவை சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு ,போதை ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. அடுத்த கட்டமாக தலைவர் அண்ணாமலை அவர்கள் உறுப்பினர்களுக்கு அரசியல் குறித்து பயிற்சி அளிக்க உள்ளார். இந்தியாவிலேயே பயிற்சி கொடுத்து உருவாக்கப்படும் ஒரே அரசியல் கட்சியாக இது இருக்கும் 50 லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்ததும் இந்த இயக்கம் அரசியல் கட்சியாக மாற்றப்படும், வருகின்ற காலம் திராவிட கட்சிகளுக்கு மாற்றாக அண்ணாமலை கட்சி இருக்கும் அதன் அடித்தளமாக தான் மாறுவோம், மாற்றுவோம் என்ற முழக்கத்தை முன்னெடுத்துள்ளோம் என தெரிவித்தார் .

### தமிழக அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கையில்

# அரசியல் சாயம் இருப்பதாக பொதுவானவர்கள் கருதுகின்றனர்: திராவிட கழக தலைவர் வீரமணி

தஞ்சாவூர் ஜூன் 27

தமிழக அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் அரசியல் சாயம் இருப்பதாக பொதுவானவர்கள் கருதுகின்றனர் என்றார் திராவிட கழக தலைவர் கி. வீரமணி. தஞ்சாவூர் அருகே வல்லத்தில்அ வர்தெரி வித்ததாவது

தமிழக அரசின் வெள்ளை அறிக்கைகள் எதற்காக கொடுக்கப் பட்டிருக்கின்றன என்பதை விட, அவை அரசியல் சாயத்துடன் இருப்பதாக அதை படித்த பொதுவா னவர்களுக்கே தோன்றுகிறது. கடந்த அரசை குற்றம் சொல்ல வேண்டும் என்பதே மனதில் வைத் துக்கொண்டு நிதி துறை மற்றும் மின்சார துறை வெள்ளை அறிக் கை தயாரிக்கப்பட்டன

மின்சாரத்துறை ,வெள்ளை அறிக் கை குறித்து சம்பந்தப்பட்டவர்கள் பதில் கூறியுள்ளார் .கடன் வாங்குவது தவறல்ல, எதற்காக கடன் வாங்குவது, அதன் மூலம் எப்படி முதலீடு செய்யப்படுகிறது. முதலீட்டின் மூலம் எப்படி வருமானம் வருகிறது என்பது முக்கியம்.

ஆனால் ஒவ்வொரு துறையிலும் மேலெழுந்த வாரியாக ஆளுங் கட்சியினர் பார்க்கின்றனர் .இந்த வெள்ளை அறிக்கைகள் மூலம் என்ன செய்யப் போகிறோம் என்பதை சொல்லவில்லை. எனவே இது ஒரு அரசியல் உள்நோக்கத்துடன் வெளியிட்டபட்டிருக்கிறது தவிர, தீர்வுக்காக அல்ல.

கடந்த ஆட்சியை குறை கூறிக் கொண்டே ஆட்சி நடத்தி விட முடியாது .அது பயன்படாது. என்றார் வீரமணி.

### வேலூர் மாவட்டத்தில்

# பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் 10,12ம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம் பிடித்த மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் விழா



வேலூர் ஜூன் 28

தமிழக அளவில் செயல்பட்டு வரும் அனைத்து நுகர்வோர் உரிமை பாதுகாப்பு அமைப்பு அறக்கட்டளையின் சார்பாக வேலூர் மாவட்டத்தில் ரூபாய் 2 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் 10,12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளி அளவில் முதலிடம் பிடித்த மாணவர்களை பாராட்டி கல்வி ஊக்கத் தொகையும் மற்றும் நலிந்தோருக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வேலூர் மாவட்டம் குடியாத்தம் பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்றது. விழாவில் அமைப்பின் மாநில தலைவர் மக்கள் சேவகர் அப்பாதுரை தலைமையேற்று குத்துவிளக்கு ஏற்றி வைத்து, நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். அரசு மற்றும் தனியார் பள்ளியில் பயின்ற பத்தாம் மற்றும் 12ம் வகுப்பில் முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 5000ம், இரண்டாம் இடம் பெற்றோர்களுக்கு ரூபாய் 4000ம், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு ரூபாய் 3000ம் என 10 மாணவ மாணவிகளுக்கு சால்வை அணிவித்து, கேடயம் வழங்கி பாராட்டினார். மேலும் சிறப்பான இந்த சேவையை வழங்கிய அரசு மற்றும் தனியார் பள்ளிகளை கௌரவப்படுத்தி பள்ளி நிர்வாகிகள் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு சால்வு அணிவித்து நினைவு பரிசு வழங்கப்பட்டது மேலும் நலிந்த மற்றும் உடல்நலம் பாதிக்கப்பட்ட முதியவர்கள் என 40 குடும்பத்தினருக்கு ஊட்டச்சத்து மற்றும் மளிகைப் பொருட்கள் தல்லா ரூபாய் 3000 மதிப்பில் வழங்கினார் மேலும் கல்வி உதவியாக மாணவர்களுக்கு புத்தக பையுடன், நோட்டு புத்தகங்கள் உள்ளிட்ட கல்வி விபரணங்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின் போது 100க்கும் அதிகமான பெண்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட மூதாட்டிகளுக்குபுடவைகள்வழங்கப்பட்டது.நிகழ்ச்சியின் துவக்கமாக பரதநாட்டியத்துடன் அமைப்பின் மாவட்ட தலைவர் குமார் வரவேற்புரை ஆற்றினார் மாநில துணைத்தலைவர் டாக்டர் பன்னீர்செல்வம் மாநிலத்துணைச்செயலாளர்சேகர்ஆகியோர்வாழ்த்துரை வழங்கினார்கள்

நிகழ்வின் இறுதியாக வேலூர் மாவட்ட அமைப்பின் மாவட்ட துணைத் தலைவர் விஜயகுமார் நன்றி தெரிவித்தார் விழாவில் அபிராமி மகளிர் கல்லூரி சேர்மன் மற்றும் குடியாத்தம் பகுதி கல்வியாளர்கள் சரஸ்வதி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் சேகர் திருவள்ளூர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியரும் கம்பன் கழக பட்டிமன்ற பேச்சாளர் மாநாடு தமிழ் திருமால் அமைப்பின் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் சுபாஷ் தர்மபுரி மாவட்ட தலைவர் நாகமணி திருப்பத்தூர் மாவட்ட தலைவர் சேட்டு செயலாளர் இளவரசி உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள் பயனாளிகள் எனஆயிரத்திற்கும்மேற்பட்டோர்இந்தநிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

விழா நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்தமைக்கு, வேலூர்மாவட்ட பொருளாளர்மதிவாணன் மற்றும் மாவட்டச் செயலாளர் சிவக்குமார் ஆகியோருக்கு அமைப்பின் மாநிலத் தலைவர் அப்பாதுரை நன்றியுடன், வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.